## சுருக்கம்

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை — சம்பந்தப்பட்ட மருத்துவக் கழகத்தில் பதிவுப் பெற்ற பாரம்பரை சித்தா, ஆயுர்வேதா, யுனானி மற்றும் ஓமியோபதி மருத்துவர்களுக்கு வழங்கப்படும் முதியோர் ஓய்வூதியத் தொகையினை ரூ.500/- லிருந்து ரூ.1000/— ஆக உயர்த்துதல் — ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (இம 2 (2) துறை

அரசாணை (நிலை) எண்.352

நாள் 27.12.2011
திருவள்ளுவர் ஆண்டு 2042
மார்கழி — 11

படிக்க

1. அரசாணை (நிலை) எண்.95, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை, நாள் 16.07.1986.
2. அரசாணை (நிலை) எண்.121, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை, நாள் 14.09.1986.
3. அரசாணை (நிலை) எண்.95, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை, நாள் 13.03.1997.
4. அரசாணை (நிலை) எண்.41, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை, நாள் 16.02.2010.

ஆணை

மேலே படிக்கப்பட்ட முதல் மூன்று ஆணைகளின்படி, பாரம்பரை சித்த வைத்தியர்களின் வறுமை நிலையினைகளையும் பொருட்டு, தமிழ்நாடு சித்த மருத்துவக் கழகத்தில் பதிவு செய்து வைத்தியம் செய்து வந்த 60 வயதிற்கு மேற்பட்ட சித்த மருத்துவர்களுக்கு ஓய்வூதியமாக ரூ.500/— அரசால் வழங்கப்பட்டு வருகின்றது.

2. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி, பதிவு பெற்ற பாரம்பரை ஆயுர்வேதா, யுனானி மற்றும் ஓமியோபதி மருத்துவர்களுக்கும், மேற்படி முதியோர் ஓய்வூதியம் வழங்குவதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டன.

3. தமிழக அரசு சமூக பாதுகாப்பு திட்டங்களின் ஓய்வூதியம் பெறும் பயனாளிகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை மாதம் ரூ.500/— லிருந்து ரூ.1000/— ஆக உயர்த்தி உள்ளது. அதனடிப்படையில் பாரம்பரை சித்தா, ஆயுர்வேதா, யுனானி, மற்றும் ஓமியோபதி மருத்துவர்களுக்கும் உதவித் தொகையை ரூ.500/— லிருந்து ரூ.1000/— ஆக உயர்த்த அரசு அறிவிப்ப செய்துள்ளது. இவ்வாறு உயர்த்துவதனால் அரசுக்கு ரூ.5,73,78,000/— கூடுதல் செலவாகும் என இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை ஆணையர் தெரிவித்துள்ளார் மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், பாரம்பரை மருத்துவர்களுக்கு ஓய்வூதியம்

வழங்குவது தொடர்பாக சில நிபந்தனைகளை அரசு விதித்துள்ளது. அதில், பிற இனங்களுடன் இவ் ஒய்வூதியம் பெற ஆண்டு வருமானம் ரூ.3600/– என நிர்ணயிக்கப்பட்டு, பின்னர் ரூ.6000/– என திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது. தற்போது, அரசு அறிவிப்பில் சமூகப் பாதுகாப்பு திட்டங்களில் ஒய்வூதியம் பெறும் பயனாளிகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகையைப் போல உயர்த்தி வழங்கப்படும் என அறிவிப்பு செய்துள்ளதால், மேற்படி அரசாணையின் நிபந்தனைக்கு திருத்தம் வெளியிடவும் ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. அண்மையில், அரசின் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையில் வெளியிடப்பட்ட மகளிர் நலம் சார்ந்த ஆணைகளில் ஒரு சில திட்டங்களைத் தவிர்த்து ஏனைய திட்டங்களில் பயன்பெற ரூ.24,000/– அதிகபட்ச ஆண்டு வருமானமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன சூழ்நிலைகளின் அடிப்படையில், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை ஆணையரின் செயற்குறிப்பினை அரசு ஆய்வு செய்து அதனை ஏற்றுக் கொண்டது. அவ்வாறே 60 வயதிற்கு மேற்பட்ட பதிவுபெற்ற பரம்பரை சித்த, ஆயுர்வேத, யுனானி மற்றும் ஓமியோபதித் துறை மருத்துவர்களின் ஒய்வூதியத் தொகையினை (மாதம்தோறும்) ரூ.500/– லிருந்து ரூ.1000/– ஆக (ரூபாய் ஓராயிரம் மட்டும்) உயர்த்தியும், மேலே, இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் விதிக்கப்பட்ட நிபந்தனைகளில் ஒன்றான ஆண்டு வருமானம் ரூ.3600/– என நிர்ணயிக்கப்பட்டு, பின்னர் ரூ,6000/– என வெளியிடப்பட்ட திருத்தத்தினை, தற்போது ரூ.24000/– வரை என உயர்த்தியும், இவ்வாறு உயர்த்துவதினால் இத்திட்டத்திற்கு தேவைப்படும் கூடுதல் தொகையான ரூ.5,73,78,000/– (ரூபாய் ஐந்து கோடியே எழுபத்து மூன்று இலட்சத்து எழுபத்து எட்டாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்தும் ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

5. மேலே பத்தி 5–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவுத் தொகையானது, கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.

"2210 மருத்துவமும் பொது சுகாதாரமும் 02– நகர்ப் பகுதி சுகாதாரப் பணிகள் ஏனைய மருத்துவ முறைகள் –104 – சித்த மருத்துவம் –I திட்டத்தில் சேராதது – AA மாவட்டப் பணியாளர்கள் – 27 ஒய்வூதியங்கள் 05 – சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்கள் (ததொகு- 2210 –02– 104 – AA 2759)"

6. மேலே பத்தி 4ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தில் இந்த நிதியாண்டுக்குத் தேவையான நிதி 2011 – 2012 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுகத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதி ஒதுக்கீடு செய்வதை எதிர் நோக்கி மேலே பத்தி 4ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள ஓய்வூதியம் வழங்கும் அதிகாரிகளுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. எனினும், இச்செலவினத்தை சட்டமன்றப் பேரவையின் கவனத்திற்கு கொண்டு செல்லும் பொருட்டு 2011–2012 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட வேண்டும், இத்துடன் வரைவு விளக்க உரையை உரிய நேரத்தில் நிதி (வ.செ.பொது.I) பிரிவிற்கு அனுப்புமாறு இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். 2011 – 2012 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுகத்திற்கான கருத்துரு நிதித்துறைக்கு அனுப்பும்போது இச்செலவினத்தையும் தவறாது அனுப்பிவைக்குமாறு இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை ஆணையாளர் அறிவுறுத்தப்படுகிறார்.

7. இந்த ஓய்வூதிய திட்டம் தொடர்பான விதிகளுக்கு தேவையான திருத்தம் தனியாக வெளியிடப்படும்.

8. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு. எண். 66173/சுகாதாரம்–1/11, நாள் 20.12.2011 – ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண் 1154 (ஆயிரத்து நூற்று ஐம்பத்து நான்கு),

(ஆளுநரின் ஆணைப்படி)

கிரிஜா வைத்தியநாதன்
அரசு முன்மைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர், இந்திய மருத்துவம் ஓமியோபதித் துறை, சென்னை–106.
மாநில கணக்காயர், சென்னை–18.
சம்பள கணக்கு அலுவலர், (வ/ தெ/கி), சென்னை–1 /35 /5
சம்பள கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள்.
பதிவாளர், தமிழ்நாடு சித்த மருத்துவக் கழகம், சென்னை–106.
பதிவாளர், தமிழ்நாடு ஓமியோபதி மருத்துவக் கழகம், சென்னை–106.
பதிவாளர், தமிழ்நாடு இந்திய மருத்துவக் கழகம், சென்னை–106
நகல்
மக்கள் நல்வாழ்வு (ம)குடும்ப நலத்(எஸ் / ஏடி /எம் ) துறை, சென்னை–9.
மக்கள் நல்வாழ்வு அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி அமைச்சரின் முதுநிலை நேர் முக உதவியாளர், சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
நிதி (சுகாதாரம் / BG I / BG II / துறை, சென்னை–9.
இ.கோ / சுத்த நகல்

(ஆணைப்படி / அனுப்பப்படுகிறது)

பிரிவு அலுவலர்.